# திறவுகோல்

2055

ஆனி

மாத இதழ்



வெளியீடு:

மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# குறுங்கவிதை நூல் "நயம்"




இலக்கியமென்பது இன்பந்தருவது, மனித இயக்கத்திற்கு ஒய்வும் இதமும் தருவது, பளுவைக் குறைப்பது, பாந்தமாய் நெஞ்சத்தை உசுப்பி விடுவது.

ஒவ்வொரு மனிதனுள்ளும் இலக்கியத்தை ருசிக்கும் தினவு மறைந்திருக்கிறது. தனது ஓய்வு நேரத்தை இன்பமாகக் கழித்திடவே கலையை உருவாக்கினான் மனிதன். ஒரு கவிஞனின் உள்ளத்து உணர்வுகள் தூரிகையில் பெருக்கெடுத்து காகிதத்தில் வழிகையில் இலக்கியப் படைப்பெனும் வண்ண ஓவியம் பிறக்கிறது.சொற்கள் மிகைத்து சுதந்திரமடைந்து உள்ளக் கிடக்கைகளைப் பிரஸ்தாபிக்கும் போது பட்டை தீட்டப்பட்ட வைரமென அப்படைப்பு மின்னுகிறது. சொற்பூக்கள் கொண்டு தொடுக்கையிலே நறுமணத்தின் செண்டாய் இலக்கியம் உருவெடுக்கிறது.

கறைகள் படிந்த விடயங்களைச் சமூகத்திற்கு எடுத்துரைக்கும் கவிஞர்களால் அவை காவியமாய் மிளிர்வதைக் காணலாம். தமிழ் இலக்கியத்தின் அடிப்படை வடிவம் கவிதையாகும். பழந்தமிழர்கள் வெண்பா, ஆசிரியம், வஞ்சி, கலி,பரி என பல பாவடிவங்களைக் கையாண்டனர். இவ்வாறான மரபு வடிவங்களோடு காலப்போக்கில் புதுக்கவிதை, குறுங்கவிதை, தன்முனை வடிவங்களும் தோன்ற ஆரம்பித்தன. காலத்திற்குக் காலம் மொழி தன்னைப் புதுப்பித்துக்கொள்வது போல் கவிதையியலும் தன்னை வளர்த்துக் கொள்கிறது.

"சுவை புதிது பொருள்புதிது வளம்புதிது சொல்புதிது சோதிமிக்க நவகவிதை" என்றார் பாரதி.

புதிய பரிமாணம் எடுத்துக் கொண்ட கவிதைகளை மகாகவி பாரதியார் உட்பட பல்வேறு கவிஞர்கள் வரவேற்றுள்ளமை அதன் முக்கியத்துவத்தை எமக்குணர்த்துவதாக இருக்கிறது. அது போல ஜப்பானியக் கவிதை வடிவமான மூவரியில் எழுதப்படும் குறுங்கவிதை கவிதைகள் நம் அனைவர் மத்தியிலும் தற்போது கூடுதல் வரவேற்பைப் பெற்றுக் கொண்டு வருவதைக் காணலாம். அதன் சொற்சிக்கனமும், கடைசி வரியில் எதிர்பாராத திருப்பமுமே அதற்கான காரணங்களாக அமைகின்றன.

அந்த வகையில் சரக்கொன்றைத் தோரணங்கள் அமைத்த நிழல் பயணம் ஒன்றின் குளுமையைத் தருவதாக இருக்கிறது சரக்கொன்றை நிழற்சாலை எனும் குறுங்கவிதை நூல்.

நூலாசிரியர் ஷர்ஜிலா (கம்பம், தேனி மாவட்டம்) அவர்களின் கவிதை மலர்கள் நிழற்சாலைக்கு மஞ்சள் ஒளியூட்டி மனதை மகிழ்வித்துச் செல்வதைக் காணலாம். குறுங்கவிதை ஜாம்பவான் மு.முருகேஷ் (முதுநிலை ஆசிரியர், இந்து தமிழ் திசை நாளிதழ், சென்னை) அவர்களும், சுருளிப்பட்டி தலைமை ஆசிரியர் கே.எம்.சிவாஜி அவர்களும் நூலுக்கான உரைகள் வழங்கியுள்ளார்கள்.

கவிஞரின் ஒவ்வொரு குறுங்கவிதையும் நம் மனதில் பல்வேறு உணர்வுகளையும் கேள்விகளையும் தோற்றுவித்துச் செல்வது அவரது குறுங்கவிதை உத்திக்கான வெற்றி என்றே கூறலாம். அழகிய குறுங்கவிதைகளால் வழி சமைத்து அற்புதப்பயணம் மேற்கொண்ட கவிஞர் பாராட்டுக்குரியவர். இயற்கை,பறவை, மரங்கள், சிற்றுயிர்கள், வாழ்வின் அவலங்கள், பாசம், உறவு போன்ற பாடுபொருட்களால் குறுங்கவிதை கவிதைகளை யாத்திருக்கும் கவிஞர் தன் சின்னஞ்சிறு கவிதைகள் மூலம் பெரிய கருத்துக்களையும் விழுமியங்களையும் சொல்லிச்செல்வது சிறப்புக்குரியது.

"உதிர்ந்த மலர்
இருந்தவிடத்தில் மீண்டும் தெரியும்
குளத்தில்"

அழகியக் காட்சிப்படிமம் ஒன்றை குறுங்கவிதைவாக மலர்த்தியிருக்கிறார் கவிஞர். குளக்கரையில் அமைந்திருக்கும் மரத்திலிருந்து மலர் ஒன்று உதிர்கிறது. உதிர்ந்த மலர் மீண்டும் அதே இடத்திற்கு திரும்புமா? கவிஞர் என்ன சொல்ல வருகிறார் என்று யோசிக்கிறோம். குளத்தில் என்னும் ஈற்றடி மத்தாப்பென வெடித்து மகிழ்ச்சியை நம் மனதில் தோற்றுவிக்கிறது. அதாவது குளத்தில் தெரியும் மரத்தின் நிழலிலே அதே இடத்திற்கு போய் உதிர்ந்த அந்த மலர் உட்கார்ந்து கொள்கிறது என்பது அழகியல் அன்றி வேறில்லை.கவிஞர் சொல்ல வருகின்ற கருத்து மெச்சத்தக்கது.

"அமெரிக்க மகனுக்காக காத்திருக்கிறார்
தென்னம் பூக்களுடன் சவப்பெட்டியில் அப்பா"

தந்தை என்பவரின் பாசமும் பொறுப்பும் அனைவரும் நாம் அறிந்திருக்கிறோம். அவ்வாறான தந்தை தன் மகனை படிப்பதற்கோ அல்லது வேலைக்காகவோ அமெரிக்காவுக்கு அனுப்பி இருக்கலாம். தனது உழைப்பை தன் மகனுக்காகத் தாரை வார்த்திருக்கலாம்.அப்படி அனுப்பி வைத்த மகனை தென்னம் பூக்களோடு வரவேற்க காத்திருக்கும் தந்தையின் நிலையை ஈற்றடியில் நாம் காணும் போது கண்கள் பனிக்கின்றன.உழைப்பை எமக்காக ஈந்து, வளர்த்து உருவாக்கி விட்ட தந்தைமாரை அவர்கள் உயிரோடு இருக்கும் போதே பார்த்துக் கொள்ள வேண்டும், கவனித்து சேவைகள்

செய்ய வேண்டும். தற்காலத்தில் அப்படிப்பட்ட மகன்கள் இல்லை என்று தனது வேதனையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார் கவிஞர்.

"சட்டென அமைதியாகும் வாகனம்
சாலையைக் கடந்து செல்கிறது
வாத்து கூட்டம்"

அழகிய காட்சிப் படிமம் ஒன்று. நிறுத்தப்பட்டு அமைதியாக இருந்த வாகனம் சாலையை கடந்து செல்கிறதோ என்று நாம் சிந்திக்கலாம். ஆனால் நடந்த சம்பவம் வேறு. வாகனத்தை நிறுத்தி வாத்துக் கூட்டத்திற்கு சாலையைக் கடப்பதற்கு உதவி செய்திருக்கிறார் சாரதி. மிகவும் சிறப்பான ஒரு கவிதை.

"கடைசி இருக்கை
காட்டிக் கொடுக்கவில்லை கிழிந்த டவுசர்"

ஏழ்மையின் மகனைக் கடைசி இருக்கை காப்பாற்றி விடுகிறது.
கிளிசலை மறைக்க அவன் தேர்ந்தெடுத்தது கடைசி இருக்கை. அதனால் யாரும் கவனிக்க வாய்ப்பில்லை. வறுமை நிலைப்பாட்டை மூன்று வரிக்குள் உள்ளடக்கிய இக்கவிதை வரவேற்கத்தக்கது. கவிதை நம் மனதை நெருடிச் செல்வதைக் காணலாம்.

"வெட்டரிவாளுடன் துரத்தினாள்கீரைக் கட்டுக்காரி
நகரும் இலவச பேருந்து"

முதல் இருவரியிலும் பயங்கரமான ஒரு சூழல் உருவாகிறது. மூன்றாவது வரியில் சிரிப்பே அதற்கு விடையாகிறது. அழகான ஒரு சென்றியு கவிதை. வாசகர் மனதைத் திசை திருப்பி அதை ஒரு நகைச்சுவையாக மாற்றி இருக்கிறார் கவிஞர்.

சிறுவயது குறும்புத்தனங்கள் இன்றும் நம் மனங்களில் அழியாமல் ஞாபகங்களாக இருக்கின்றன. இந்தக் கவிதையைப் பாருங்கள்.

"விதைகள் புதைத்த இடம் தோண்டி தோண்டி பார்க்கும்
சிறுவனின் ஆசை"

விதைகள் வேர் கொண்டு முளைப்பது அனைவரும் அறிந்த விடயம். அது எவ்வாறு முளைக்கிறது என்று அறியும் ஆவல் கொண்டு அதனைப் புதைத்த இடத்தில் தோண்டித்

தோண்டிப் பார்ப்பது அனைத்து சிறுவர்களிடமும் இருக்கும் ஒரு வேடிக்கையான குணம். அதையே கவிஞர் இக்கவிதையில் பதிவு செய்திருக்கிறார்.

இவ்வாறு கவிஞரின் கவிதைகள் பேசுகின்ற கதைகளும், உணர்ச்சிகளும், கருத்துக்களும், ஏராளம். தளும்பாத நிறைகுடமென, குறுங்கவிதை கவிதைகளின் ஊற்றென நம் கவிஞர் ஷர்ஜிலா பர்வின் அவர்களைப் பாராட்டுதல் மிகப் பொருத்தமானது. அவருக்கு எனது அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

"நத்தையாகிறேன்
நிழல் எல்லாம் பூக்களுடன்
சரக்கொன்றை நிழற்சாலை"

நூலுக்கான தலைப்பைக் கொண்டு வந்த கவிதை மிக அழகு. சரக்கொன்றை உதிர்த்த பூக்கள் எல்லாம் தரையில் விழுந்து மெத்தை ஒன்றை உருவாக்க, அந்தப் பூக்களுக்குள்ளே பயணிக்கின்ற அனுபவம் நத்தைக்குக் கிடைத்திருக்கிறது. அதைப் பார்த்தவுடன் தானும் நத்தையாக வேண்டும் என்று ஆசைப்பட்டிருக்கிறார் கவிஞர்.

இப்படி வாசிக்க வாசிக்க சுவை கூட்டும் சிறப்பான குறுங்கவிதை கவிதைகள் சரக்கென்றை நிழற்சாலை நூலில் இடம்பெற்றுள்ளன.

இனிமையான, சுவாரசியமிக்க குறுங்கவிதைச் சுளைகளை நமக்குப் பரிமாறி இருக்கிறார் கவிஞர்.

நிழற்சாலையில் குறுங்கவிதை ரசனைப் பயணம் ஒன்றை மேற்கொள்ள அன்புடன் அனைவரையும் அழைக்கிறேன். வாசகர்களுக்கு இனிய சுவையுடன் காத்திருக்கிறது "சரக்கொன்றை நிழற்சாலை".

நூலாசிரியருக்கும் சிறப்பான அட்டைப்படத்துடன் நூல் வெளியீடு செய்த படைப்பு பதிப்பாகத்தாருக்கும் எனது மனமார்ந்த, அன்புநிறை வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும், கவிஞர் அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த படைப்புகளை தமிழ் கூறும் நல் உலகுக்கு நல்க வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கிறேன்.

## நூல்: நயம்

நூலின் பெயர்: சரக்கொன்றை நிழற்சாலை
வகைமை: குறுங்கவிதை

நூலாசிரியர்: ஷர்ஜிலா பர்வின் யாக்கூப்

நூல் வெளியீடு:
படைப்பு பதிப்பகம்
முதற்பதிப்பு 2023

வடிமைப்பு:
புலவர் மீரான்

பக்கங்கள்: 36

விலை:
ரூ.100 (இந்திய ரூபாய்)

நூல் வாங்க தொடர்புக்கு:
அலைபேசி எண்: +91 8825868689

--



Dr. ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர்,
இலங்கை.

---

# தாயின் மீது

கொண்டிருந்த பாசம்
சகோதரியின் மேல்
வைத்திருந்த அன்பு
மனைவியின்பால்
எனக்கிருந்த காதல்
மகளிடம்
கொண்டிருந்த நேசம்
என
ஆக மொத்தத்தையும்
தனியொருத்தியாய்
வாரிச் சுருட்டிக் கொள்கிறாள்
எனது பேத்தி அவந்திகா.
/

வழக்கமாக காக்கைக்கு
உணவு வைத்து விட்டு
உண்பது என் வழக்கம்.
இன்று பலமுறை அழைத்தும்
வரவில்லை காகம்.
தம்பி மகளுக்கு
இன்று வளைகாப்பு
பேத்தியை வாழ்த்தி விட்டு
அப்படியே
அங்கு விருந்துண்டு மகிழ
சென்றிருக்கலாம்
அம்மாவும் அப்பாவும்.
/
அவள்
மை தீட்டிக் கொண்டதும்
விளக்கானது முகம்
நெய்யானது பார்வை
திரியானது மை
சுடரானது விழிகள்.
/

கடனாக வேண்டாம்
பிச்சையாகக் கேள்
பத்துக்கு ஐந்தாவது கிடைக்கும்.
கடன் கவனத்தில் இருக்கும்.
பிச்சை தர்மத்தில் சேரும்.
/

பிழம்பாய்க் கீற்றுப்பரப்பும்
பகலவனையும்
பளிங்குப் பாலூற்றும்
நிலவையும்

வைரங்களாய் ஜொலிக்கும்
நட்சத்திரங்களையும்
நம்பிக்கையற்று தன்னிலே
ஒளிக்கூட்டைச்சுமந்துத் திரிகிறது
மின்மினிப்பூச்சிகள்.
/

அப்போது
அம்மாவின் கழுத்திலிருந்த தாலி
அடிக்கடி
அடகு கடைக்குப் போகும் வரும்.
இப்போது
ஒரு தடவைதான்
சமையலறைக்குப் போனது
திரும்பவில்லை.

அது தங்கம்
இது மஞ்சக்கிழங்கு.

--

பாரியன்பன் நாகராஜன்
82/32 -B, பிள்ளையார் கோயில் தெரு
காமாட்சி அம்மன் பேட்டை
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



---

## பட்டாம்பூச்சி வரைந்த

காகிதத்தை கசக்கி தூக்கியெறிந்தேன்...

சிறிது நேரம் கடந்த பின்
கவனிக்க நேர்ந்தது
படப்படக்கும் காற்றில்
அசைந்துக் கொண்டிருந்தது

அது ஒரு வறண்ட இலைகளற்ற
பூந்தொட்டியின்
செடியில் அமர்ந்திருந்தது.

—

சாயிராம்,
தஞ்சாவூர்.

## நல்வரவு

மாவட்ட வாரியாக
மழைக்கான
மஞ்சள் எச்சரிக்கை
ஆரஞ்சு எச்சரிக்கை
சிவப்பு எச்சரிக்கை விடுகிறது
வானிலை அறிக்கை
அவையாவும் பூமிக்கான
பச்சை எச்சரிக்கைதானே!

—

நேசன் மகதி

# பொம்மை

உயிரற்று கிடக்கும்
உன்னை விலைகொடுத்து
உயிராக்கி கொள்கிறார்கள்

சிரித்தபடி இருக்கும்
உனைக்காட்டி
சிரிக்க வைக்க விழைகிறார்கள்
அன்னையர்கள்
மழலையருக்காக....

விம்மியழும் மழலையின்
குறியீட்டில் பசியென்று
அணைத்து பாலூட்டுகிறாள்
அன்னை

அழத்தெரியாத உனக்கு
குறியீடு இருக்கிறதா
உன்பசியறிந்து
அணைப்பவர் யாரோ?

திருவிழா கூட்டத்தில்
விலைபேசி விற்கப்படுகிறாய்
தோளில் சுமக்கும் உன்னை
இறக்கி விடுகிறார்கள்
விலைபேசியவுடன்...

அழத்தெரியாத நீயோ
இரசிக்க வைக்கிறாய்
சிரிக்க வைக்கிறாய்

மழலையின் கைகளில் தவழும்
நீ மழலையாகிறாய்

உனக்கான தொட்டில்
காத்திருக்கிறது உன்னை
உறங்க வைக்க....

பசியில் சிதறி விழும்
பருக்கைகள் இங்கே
உனக்கும் ஊட்டிவிடுகிறது
பசியாற்றும் மழலை

பேசத்தெரியாத உனக்கு
மொழியைக் கற்றுக்கொடுக்கிறது
கற்கும் மழலை

மழலையர் இல்லங்களில்
மழலையாய் பவனி வருகிறாய்
உறவுகள் கூடி மகிழ்கிறது
உறவுகளோடு உறவாய்
உயிர் பெறுகிறாய்

சிரிக்கும் மழலையின்
கைகளில் அமர்ந்தவாறு
எங்களையும் சிரிக்க
வைத்துவிடுகிறாய்
எங்கள் உறவாய்....

—

ஞா. முனிராஜ்

# பெண்மை

பெண்ணியம் பேச கூட ஆண்களை
எதிர்ப்பார்த்த காலம் நகரட்டும் -
பெண்களுக்காக பெண் குரலே ஓங்கி
ஒலிக்கட்டும்;

அடக்குமுறையில் சிக்கி
அடிமைப்படுத்தப்பட்ட பெண்களின்
அவல கதைக்களுக்கு உடனே
முற்றிப்புள்ளி வைப்போம்:

பெண் உணர்வுகளுக்கும் உயிருண்டு
என்பதை நேர்த்தியான வினை
அம்சங்களோடு வாழ்ந்து காட்டுவோம்;

மூடர்களே! புறக்கணிக்க வேண்டிய
சாமானிய சமுதாயம் அல்ல எம் பெண்
சமுதாயம் -
பல புரட்சிகள் செய்து சாதிக்கப்பிறந்த
எங்களை வைத்து தேடாதே இனி
ஆதாயம்;

பெண்மை - ஓர் தவம்
பெண்மை - ஓர் வரம்



பெண்மை - மகா சக்தி
பெண்மை - பெருமை
பெண்மை -
கிடைப்பதற்கு அரிய
ஓர் பொக்கிசம்
பெண்மை - நம்
அடையாளம்
பெண்மை - இவ்வுலகின் மையப்புளி.

இதை உணர்ந்தவர்கள் பெண்மையை
போற்றட்டும்!
போற்ற மனிமில்லை என்றாலும்
பரவாயில்லை -
பெண் சிறகுகள் வான் நேக்கி பறப்பதை
பார்த்து ரசியுங்கள், வாழ்த்துங்கள், உடன்
நின்று உற்சாகப்படுத்துங்கள் -

ஏன் என்றால் சாதிக்கத்துடிக்கும் உன்
வீட்டுப்பெண்ணும் அதில் இருக்கிறாள்
எம் மானுடா:

— கவிதாயினி. பார்கவி.செ,
*M.E (PS).,*
வல்லூர், மன்னார்குடி.

---

# பருவத்திலே ஓர் பார்வை

பக்குவத்திலே ஓர் பார்வை
என்பதெல்லாம்
உன்னிடத்தில் எனக்கில்லை
அதற்கு அறிவுமில்லை
அளவீடும் இல்லை
பணிவுமில்லை
பயமுமில்லை



மாறாக பதட்டமுமில்லை
தூரமோ
துயரமோ
என் பார்வையின் தேவையெல்லாம்
என்னை தேடும் உந்தன் தேடல்தான்.

—
சூர்யகலா சரவணன், *B.E.,*
கண்டிதம்பேட்டை.

# ஏதேன் தோட்டத்தின் விடுமுறை நாள்

எனக்கென்னவோ எப்பொழுதும்
எனதிரு கண்கள்
அவள் முகத்தில் மட்டுமே விழிக்கின்றன
ஆனால் கண்கள் அழகுதான்

எப்பொழுது பார்த்தாலும்
எனது பெயரில் துடிக்கின்றன
இதயம் என்னவோ எனக்குத் தான்

உனது உள்ளங்கை
சட்டென கனமேறிய பொழுதுதான்
உனது நினைவுகளை நிரப்பிய
இதயத்தில் கையில் வைத்து
விட்டேன்
தொப்புல் கொடியும் வளரும் என்பது
அறியாமல் பிடிங்கிவிட்டேன்
நரம்பினால் இணைந்த இதயங்களை

நொடிக்கு நொடி
சண்டையிட்டு மன உளைச்சலை
கொட்டிச் செல்லும் நீ
அந்த மின்விசிறியை தட்டிவிடாமல்
சென்றதில்லை
ஆனாலும் தென்றல் என்வசம்தான்

நடையிட்டால் மோகினியாக
படுத்தால் பேயாக
உருமாறிடுமவள்
எந்த சூழலிலும்
அவள்
அவளாகத்தான் இருக்கிறாள்
ஊடலுக்குப் பின் காதல் பற்கள்
முளைக்குமென
ஏவாளிடம் பிடிங்கிட்ட ஆப்பிளுடன்

நான் முட்டாள் பிறவியானதால்
ஆதமிடம்
ஒற்றையிலையை மட்டும் அவ்வப்போது
வாங்கிக் கொள்வேன்
அவள் கோவமுறும் தினமெல்லாம்
இன்று ஏதன் தோட்டத்திற்கு
முழுநேர விடுமுறை
பூக்கள் வேலிக்கு வெளியே
உதிரக்கூடும்...

## மகளின் தூரிகையில் அறிவாய் சொட்டியப் பிராணி

இரவை விழிங்கியது போல்
ஒரு இராட்சச விழிகள் தான்
உலகை விழுங்கியது
அதற்கு இமைகள் சிறியதும்
பெரியதுமாக இருந்தது

சூரியனை விழுங்கும் அளவிற்கு
பெருத்துக் கொண்டே வளர்ந்தது
ஆனால்
புள்ளிகள் மட்டும் மானின் புள்ளிகளை
ஒத்திருந்தது

அப்பத்தாவின் இரவுக் கதைகளைப்
போல
பயமுறுத்தும் வண்ணமும்
ஒற்றைக் கொம்பும் நீண்டு நடந்த
வளர்நதிருத்தது

அதில் பூமியைப் பாதியும்
நிலவின் பிறைப் பாதியும்
வளரத்தொடங்கியது

சற்றுமுன் ஆணாக உறுமாறியது
சட்டென அன்பூற்றிட கன்னியாய்
மாறியது
மேலாடைகள் ஏதுமில்லை
ஆனாலும் காமத் துளிகளை வீசவில்லை
ஏதோ ஒன்றைத் தேடித்தான் வந்திருக்க
வேண்டும்
எதையும் இழக்காமல் திரும்பிச்
சென்றால் நலம்தானே...

யார் எதிர் நின்றிருந்தாலும்
கவலையில்லை
அது கண்களை கட்டியிருந்த்து
அவசரமாக மென்று தின்று சிக்கிக்
கொண்ட தொண்டைக்குழியில்
கொப்பளித்துக் கொண்டிருந்தது
விழுங்கிய பூமியின் நீர்ப்பரப்பு
தாகம் தீரவில்லை என்பதும் தான்
ஐயம்...

ஒரு நேர்கோடும்
ஒரு வளையக்கொடும் தலைமேல் சுற்றி
வரைந்தாகிய
அந்த பிராணியின் மொத்த ரூபத்தையும்
கணித கோட்பாட்டில் வரைந்திட்டு
சரியாவென கேட்கிறாள் மகள்
எழுத்தும் எழாமல் பார்க்கும் எனக்கு
தலைக்கு மேல் புதிதாக மூளை
வளர்த்திருந்த்து
மகள் வரைந்த பிராணியின் அறிவைப்
போல...

## விரல்களை மடக்கினால் உள்ளங்கை மறையத்தானே செய்யும்

எத்தனை முறை காத்திருந்தாலும்
அவர்கள் அப்படித்தான்
செய்துவிடுகிறார்கள்
யாருக்கும் தெரியாது என மறைத்து
வைத்திருந்த விடயம்தான்
நம்பிக்கையுடைய அவர்களால்
தெரியபடுத்தபடுகிறது

எனக்கு நன்றாகவே தெரிந்திருந்தது
எப்படியும் அந்த விடயம்
அமலுக்கு வந்துவிடுமென்று
ஆனால்
இவர்களாலே அம்பலமாகிவிடுமென
துளியும் நினைத்துவிடவில்லை...

இதற்காகவே நான்
பலமுறை தனிமையை மட்டும்
கையிலேற்றி நின்றேன்
சுதந்திரங்களை மறைத்தேன்
ஆனாலும் தெரிந்துவிட்டது
அனைவருக்கும்

எத்தனைமுறை கூட்டத்தில்
அமர்ந்தாலும்
யாராவது அந்த விடயத்தை
தொடர்ந்திடுவாரோவென பதட்டம்
தொற்றிக் கொள்கிறது
ஆனாலும் இருக்கையை இறுக்கப்பற்றி
புன்னகை சொற்களை பெயர்கிறது

இருக்கட்டும்
இதுவரை யாரும் கேட்கவில்லை

நான் செய்த அந்த காரியம் தனை
ஒருவேளை
அவர்களுக்கு சரியெனப் படலாம்
இல்லையெனில் அவர்களும்
இதனுள் பாதம் வைத்து மேலெழும்பி
இருக்கலாம்
இருப்பினும் விரல்களை மடக்கினால்
உள்ளங்கை மறையத்தானே செய்யும்

## நானெனும் போர்வை

நான் யாரென பிம்பத்தை
பார்த்தும் கேட்டும்
ஐவிரல்களை நுழைத்தென்னை
வெளியிழுத்து
பார்த்தும் என் சாயல் புலப்படவில்லை

சதைகளை போர்த்திட்ட
தோல் சாயங்களின்
நிறங்களை
நானே வெளிக்கொணர்ந்து
மார்சாய்த்து
மடிசாய்த்து
சாயலை பரிபூரணிக்கிறேன்

ஆனாலும் சாயலின் முழுமை
என்னை
திருப்திபடுத்தவில்லை
நெற்றி முதல் பாதம்வரை
கிழித்தெனது பிம்பத்தை
தனியே நிறுத்தி
இன்றும் என்னை பார்த்தே நகர்கிறேன்

ஆராக்களை களைந்துண்டு
தனித்தனியே புள்ளிகளமைத்து
கண்களை உருட்டி
சதைகளை கூறாக்கி
கோடுகளை நேர்படுத்தி
குருதி படிவில் பாதம் பதிக்கிறேன்
எனது என்னைப் பிரித்து
தோல்மீதேற்றி கசிகிறேன்
செங்குளிரைப் போர்த்தியபடி....

துடித்துக்கொண்டிருக்கும் இதயமும்
நினைத்துக் கொண்டிருக்கும்
மூளையும்தான்
இங்கே பிரிக்க முடியாததாகிறது

## இல்லாமல் போனவர்களுக்கு எனதின் பாதி சாயல்

ஒரு வனத்தினை
கையாளத்தெரிந்தவனுக்கு
அரிமாவின் சாயல்
ஆனாலும்
முழுமையடைவதில்லை
அவ்வப்போது புல்லரிக்கும்
குள்ளநரி புத்தியின் சிலிர்ப்புகள்

மயிரிலைகளை நெட்டுக்க நிமிர்த்திய
சாதனைகளை
இரு கண்களை பொத்தி
புன்கை மரத்தை அனைத்துப் பார்த்தவன்
அரிமாவின் வாலைத் திருகி
வான்வசம் வீசத் தொடங்கினான்

வசமாகத்தான் இருந்தது
வேர்களை பரப்பி
பூக்களை நிரப்பி
ஒரே ஒரு துளையில் மட்டும்
சூரியனை வரவழைத்தை பெருமரம்

செம்மண் படர்ந்த வனத்தை
குளியலிட்டு சென்ற மழையில்
குளித்த பாதங்கள்
கரைந்தோடுகின்றன ஓடைமுழுதும்

மண்புழுக்கள் நெளியவிட்டு
விதைகளை முட்டிய
பருவத்தினை படர்ந்தும்
பாலங்களை கடந்தும்
காளான் கூட்டிற்குள் மறைந்துக்
கொள்கிறது
உருமாறிக் கரைந்தோடுகிறது
அரவம் சிலிர்த்த பருவமொன்று

புள்ளிகளாய் படர்ந்தோங்கி
பழங்களை உதிர்த்து
படபடக்கும் இருண்மையை
இன்றும் தோல் தூக்கியமர்த்தி
கேலி விதைத்து
பெருத்த மரங்களில் வன்மக் கோடுகளாய்
இல்லாமல் போனவர்களுக்கு எனதின்
பாதி சாயல்

## தழைகீழாய் தொங்கும் மனம்

விரலிடுக்கினைப் பற்றி நகர்ந்திடும்
உறவுகளுக்கு
அணிகலன் கீறிவிட வலு மறுப்பதில்லை
ஆனாலும்
இடைவெளிகளில் நிரம்பிவிடுகிறது
அன்பெனும் பொன் தருணங்கள்

நகங்களின் நுனிகளால்
தசைகளை கூறிடும்
காம விரல்களை
பல வயதுகள் கண்டதில்லை
விரலிடுக்கின் விசக்கசிவுகளை...

தழும்புகளை துணிப்படர்த்தி
தடங்களின் எடைகூட
நிலத்தினை அழுந்தாது
அமைதியூர்வலம் கொள்ளும்
மனங்களைத்தான்
நீங்கள் மௌனக்காரியை என்கிறீர்கள்

இரண்டு கைகளை இல்லையென
விரித்து புன்னகைப்பவரிடம்
ஒரு நிமிடம் எனும் வார்த்தையும்
ஒழிந்துக் கிடக்கிறது
உள்ளுக்குள்ளே சொல்லிக் கொள்வதால்
என்னவோ
இன்றும் இல்லையென்றே உரைக்கிறது
பதற்றமுற்ற இதழ்கள்

தரைக்குமேல் பாதம் பதித்திடும்
நமக்கெல்லாம்
நிலத்தினை ஊடுருவிய ஒரு பிம்பம்
வேர்களையும் மண்புழுக்களையும்
மென்று தின்று உடன் வருகிறது
வழுக்கட்டாயமாய்
ஆனாலும்
அடுத்த அடி எடுத்து வைத்து
முன்னேறுகிறது
தன்னை மட்டுமே நம்பிக்கையாய்
கொண்டு
தழைகீழாய் தொங்கும் மனங்கள்

—

சே. கார்கவி கார்த்திக்,
நாகப்பட்டினம்.



# இது அறிவின் மண்..!

பள்ளிகள் திறந்தன....!
மீண்டும் புதிதாய் ...
பள்ளியில் மாணவர்கள் ..!

கடந்த ஆண்டின் ஏமாற்றம்..!
இந்த ஆண்டின் எதிர்பார்ப்பு....?
வரும் ஆண்டின் வெற்றி....!
இவைகளை கனவுகளாய் சுமந்து..!?

கல்வி மட்டுமே -
மனிதனை உருவாக்கும்....!
சமத்துவத்தை உணர்த்தும்...!
அறிவை பெருக்கும்...!
அடிமை ஒழியும்....!

எல்லோருக்கும் எல்லாமும்
கிடைக்கும்....!?
என்ற நம்பிக்கையில்...
பள்ளிக்கு செல்லும் மாணவர்கள்...!

இன்றைய தலைமுறையின் ..
மகிழ்ச்சி கல்வி...!

இது அடுத்த தலைமுறையில்
தொடர .....
விட்டுவிடாதீர்கள் கல்வியை...!

நம் அடுத்த தலைமுறை...
உலகத்திற்கு உதாரணமாய்
இருக்க....?

கல்வி மட்டுமே சாத்தியம்...!
நம்பிக்கை மனம் கொண்டு...
படிப்பை நேசியுங்கள்...!
வெற்றி பெறுங்கள்...!?

நாம் யார் என்பதை..
இவ்வுலகிற்கு தொடர்ந்து...
நிரூபியுங்கள்....!?
ஏனெனில் -
இது அறிவின் மண்..!?

—

**முனைவர். சா.சம்பத்,**
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



**ஓவியம்:**
**மா. நிரல்யா,**
இரண்டாம் வகுப்பு,
சிங்கப்பூர்.



# விவசாயம் காப்போம்

வியர்வையை வீரிய விதையாக்கி
வெயில்மழை வேதனையை எருவாக்கி
வறண்ட பூமியைச் சரியாக்கி
வாங்கிய கடனைக் கரியாக்கி
கௌரவம் காக்க பயிரிடுவார்

கனவுகள் ஆயிரம் கண்டிடுவார்
கற்பம் உற்றத் தாய்மாரைக்
கண்போல் பொத்திக் காப்பதுபோல்

உழவுத் தொழிலை உன்னதமாய்
உழன்று உவந்து ஆற்றிடுவார்

சேற்றைக் குழப்பி நாற்றுநட்டு
ஏற்ற நாளில் களையெடுத்துக
கூட்டுறவு வங்கி மருந்தையெல்லாம்
மூட்டை மூட்டையாய் உரமிடுவார்

கடின உழைப்பிற்குத் தகுந்தாற்போல்
கதிர்கள் செழித்து வளர்ந்திடுமே

போவோர் வருவோர் கண்ணெல்லாம்
பொறாமை பற்றி எரிந்திடுமே
விளைந்த மகசூல் அறுக்கையிலே
விழுமே தலையில் பேரிடிகள்

பன்றி அழித்தது ஒருபங்கு
பதறாய் போனது ஒருபங்கு
தண்ணீர் வாரம் ஒருபங்கு
தரையில் உதிர்ந்தது ஒருபங்கு

மீதியைக் கோணியில் அளக்கையிலே
மின்னியை நெறிக்கும் கமிட்டி விலை
கூடிப் பேசிய வியாபாரி
குறைத்துக் குறிப்பான் மதிப்பீடு

வாடிப் போன முகத்தோடு
வயிற்றில் எரியும் தீயோடு

உழைத்தவன் விழியில் உயிர்வடியும்
வலுத்துவன் பையில் பணம்நிறையும்
வாங்கிய கடனுக்கு வட்டிக்கட்டி
வாசலில் வசவுகள் வாங்கிக்கட்டி
அலைந்து அழுது வாழ்வதுதான்

அன்றைக்கும் இன்றைக்கும் உழவர்நிலை
மானம் கெட்டுப் போனாலும்
மண்ணை மலடாய் விடுவதில்லை

வானம் பொய்த்தும் போனாலும்
வேறு தொழிலைப் புரிவதில்லை

ஏரின் பின்னால் உலகென்று
ஏற்றிச் சொன்னார் வள்ளுவனார்

ஊருக்கெல்லாம் உணவளிக்கும்
உழவன் பின்னால் உயிர்ப்பரிக்கும்
வறுமை எமனேச் சுற்றுகிறான்

வாழ்வைச் சுருக்கில் பற்றுகிறான்
பாரின் பசியைப் போக்கிடுவார்

ஏரின் மாந்தர் உடிவர்களைத்
தேரில் ஏற்றி வரவேண்டாம்
தெய்வம் என்றும் தொழவேண்டாம்

நேரில் பார்த்தால் கைகுலுக்கி
நேர்த்திக்கடனைச் செலுத்திடுவோம் !

—

பொன். தெய்வா



# துளிப்பா

ஒன்று கூடி
திரண்டு வந்தன
கருமேகம்

தேர்ச்சி பெற்றோர்
மகிழ்ந்து கொண்டாடினர்
விண்ணில் விண்கலம்

வயிற்றுப் பசி
துடித்துக் கொண்டிருந்தது
அடிபட்ட நாய்

அழகாய் வளர்ந்து
படர்ந்து இருந்தது
அணல்

சிந்தனை துளிகள்
பரவிக் கொண்டிருந்தன
மழை பொழிவு

அரிசி விலை
உயர்ந்து கொண்டிருந்தது
மக்களின் ஏமாற்றம்

வறுமைக் கோடு
அழிக்கப் படவில்லை
சாதியம்

கடுமையான மழை
நிற்காமல் தொடர்ந்தது
மட்டை பந்தாட்டம்

வெயிலின் தாக்கம்
கடுமையாக இருந்தது
கல்விக் கட்டணம்

குளுமை அதிகமானது
நடுக்கம் நிற்கவில்லை
நிலஅதிர்வு

-- செ. இலட்சுமணக்குமார்,
ஈரோடு.

---

# தாய்மை

மாதங்கள் ஒன்பதைக் கடக்க அந்நாளும்
வந்தது, கேள்விக்குறியென வளைந்து.,
நீ என் கருவறையில் சுருண்டிருப்பதைப்
போல நானும் சுருள்கிறேன் ...

சுருக்கென்று தைக்கப்பட்ட ஒற்றை
ஊசியில் பாதி உடல் மரத்துப் போக.,
மின்சார வலிகள் வழுவிழக்க.,
அரைகுறை மயக்கத்தில், பாதி
மரணித்திருக்க.,

நீ பிறப்பெடுக்கவே.,
என் பிறப்புறுப்பின் மேல்
சரக்சரக்கென்று கத்தியிடும் சங்கீதம்
செவிகள் உணர்ந்திருக்க...

மேலும் கீழுமென நெம்பி இழுக்கும்
அதிர்வுகளில், செவிலியர் கைகளில் என்
கைகள் அமிழ்ந்து புதைய,
அரைப்பிணமென கிடக்கும் என்னுடல்
உன் வரவையெண்ணி !!!
புதுக் குருதி ஊற்றெடுக்கிறது !!!

சுற்றிலும் நிற்கும் மருத்துவக்குழு
உதவியுடன்,
வலியும், வேதனையும் மாறி மாறி
வதைக்க., முதன்முறை அழுகுரல்
சங்கீதமென ஒலிக்கிறது !!!
மீண்டும் பிறக்கிறேன் !!!

இமைக்காமல் ரசிக்கும்போதே மயக்கம்
எங்கேயோ அழைத்துச்செல்ல,
நினைவுக்கு எட்டியபோதெல்லாம்,
ஒன்றிற்கு நூறுமுறை ஆணா அல்லது
பெண்ணா என்பதை கேட்டதுதான் !!!

பதிலை பெரும்முன் மீண்டும் மறந்து
போனது மொத்தமும் .,
என்னவன் பெயரை தவிர !!!
சற்று நேரத்தில் மெல்ல மெல்ல
திரும்புகிறேன் நினைவுகளுக்கு !!!

முதலில் நினைவுக்கு எட்டியதென்னவோ
என்னவன் முகம் மட்டும் !!!

மறுபிறவியென விழிக்கையில்.,
காணத் துடித்தது என்னவனோடு
சேர்த்து.,
என்னில் பதியென துளிர்த்த
அரும்பையும் !!!
முகமலர்ச்சியுடனும்,
அரைமயக்கத்திலும் பிஞ்சுபாதங்களை
கண்டு அகமகிழ்ந்த அவ்வினாடிகள்
உணர்த்தியது தாய்மையை !!!

—

சரண்யா ரவி,
கோவை.

---

## சிறுவர்கள் பகுதி பாடல்
## (ஆட்டம் பாட்டம்)

சிலு சிலுத்தான் காத்து வந்து ஆட்டம்
போட்டு கிச்சாம்,
காத்து ஆட்டம் போட்டு கிச்சாம்!

ஒரு குருட்டு காக்கா கூட நின்னு பாட்டு
பாடிக்கிச்சாம்,
காக்கா பாட்டு பாடிக்கிச்சாம்!

குட்டி முயல் கூட வந்து குதிச்சி
ஆடுகிச்சாம்,
முயல் கும்மாளம் போட்டுக்கிச்சாம்!

ஒரு கோலமயில் தோட்டத்திலே பரதம்
ஆடிக்கிச்சாம்,
மயில் பரதம் ஆடிக்கிச்சாம்!

தவளைக் கூட்டம் ஓடி வந்து
மேளம் கொட்டுகிச்சாம்,
தவளை மேளம் கொட்டிக்கிச்சாம்!!

—

எம். என். பாஸ்கரன்,
கிராம நிர்வாக அலுவலர் (ஓய்வு),
மன்னார்குடி.

# இருதய மேரி உணவகம் (சிறுகதை)

"ஏல மக்கா இன்னைக்கு பள்ளிக்கூடம் முடிஞ்சதும் கண்டிப்பா புரோட்டா சாப்பிடணும் லே"

"ஆமா லே யார்லாம் போகலாம்?"

"நீ, நான் கோபி, கண்ணா நாலு பேரும் போகலைம்லே "

அந்த தொழில் பயிற்சி நிலையத்தில் படிக்கும் நான்கு மாணவர்கள் நண்பர்கள்
முத்தையா புரத்தில் இருந்து தூத்துக்குடி போய் மீண்டும் அவங்க வீட்டுக்கு போகனும்

அப்படி இருக்கும்போது
புரோட்டா சாப்பிடுவதற்காக இருதய மேரி உணவகத்துக்கு வர்ராங்க
அப்போது நான்கு வழி சாலைகள் எல்லாம் கிடையாது
இருதய மேரி உணவகம்
திருச்செந்தூர் சாலையில தான் இருந்தது
இருதயமேரி உணவகம் அமைந்து இருந்தது,
சாலையில் இருந்து கீழே பள்ளத்தில் உணவகம் இருக்கிற மாதிரி அமைஞ்சிருந்தது ,
சாலையில் இருந்து இரண்டு படி எறங்குனா அந்த உணவகத்துக்கு உள்ளப் போயிறலாம்
ஒரு அண்டர் கிரவுண்ட் உணவகம் என்றுக் கூட சொல்லலாம்

திருச்செந்தூர் போறதுக்கான வாகனங்கள் பக்தர்களோட வாகனங்கள் அதிகமா போயிட்டு இருக்குது
நல்ல மத்தியான நேரம்
நான்கு நண்பர்களும் புரோட்டா சாப்பிட்டு இருக்காங்க

கடைக்கு முன்னால புரோட்டா மாஸ்டர் தோசைக் கல்லுல நின்னுட்டு இருக்காரு
திடீர்னு மினி வேன் வண்டியில் இருந்து இறங்கி வந்த
கூட்டத்தில் உள்ளவர்கள் இருதயமேரி உணவகம் உள்ளவங்கக் கிட்ட சண்டைப் போடுறாங்க

பேச்சு முத்தி கைக் கலப்பு ஆகப் பாக்குது
உணவகம் பள்ளத்துல இருந்ததுனால வேன்ல்ல இருந்து இறங்கி வந்தவங்க சாலையில் இருந்து இறங்கி வந்தா உடனே

மேல இருந்து தோசை மாவு எல்லாத்தையும் கொட்டி விடுட்றாங்க
டியூப்லைட்டை எல்லாம் அடிச்சு உடைக்கிறார்கள்

அடுக்கி வைத்த கோழி முட்டையை எல்லாம் தூக்கி எறிகிறார்கள்
அந்த உணவகம்ல ரெண்டு டைனிங் டேபிள் தான் போட முடியும் எட்டு பேர் தான் சாப்பிட முடியும்.

நாங்க நாலு நண்பர்கள் மட்டும் தான் சாப்பிட்டு இருக்கிறோம்,

உணவகம் வோட முதலாளி, வேலை பார்க்கிற மாஸ்டர் யாரும் எங்கக் கிட்ட எதுவும் பேசல.

எதுக்கு உணவகத்துக்கு வந்து அடிச்சு, நொறுக்கி இருக்காங்க அப்படிங்கறது எங்களுக்கு தெரியவே இல்லை,

நாங்க நல்ல புரோட்டாவ சாப்பிட்டு தான் இருக்கோம்.

அவ்வளவு சண்டையிலேயும் அவங்க எங்க மேலே அடி விழாம எங்களை அவங்க காப்பாத்தினாங்க,

எதுக்கு உணவகத்தை அடிச்சு நொறுக்குனாங்கன்னு தெரியாமலே புரோட்டாவை வயிறு முட்ட தின்னு போட்டு முத்தையா புரத்தில் இருந்து தூத்துக்குடிக்கு பேருந்துல போயிட்டு இருக்கும் போது•••

"ஏல கோபி நீ மட்டும் ஏம்பல சோகமா இருக்கேன்னு"
கண்ணாக் கேட்டதும்

"அந்த வேன்ல இருந்து வலது பக்கம் கடைசி இருக்கையில இருந்து கை காட்டுனிச்சே
அந்த பொண்ணு முகத்தைக் கூட சரியா பாக்க முடியலே லே ன்னு"

கோபி சொல்லி முடிச்சதும்

மத்த மூன்று நண்பர்களும் ஒன்னும் பேசாமல் கோபியை விட்டு ஒரு அடி தள்ளி போய் நின்னாங்களே பார்க்கனும்..

—



**இரா. மதிராஜ்,**
காங்கேயம்.
அலைபேசி: 9788475722

---

# தனிமை

உறவாக வந்ததெல்லாம்
உயிராக இருந்திடுமா?

உயிராக இருப்பதெல்லாம்
பிரியாமல் இருந்திடுமா?

புரியாத வார்த்தைகளில்
புதினங்கள் வரைகின்றேன்.

புலம்பிய தத்துவத்தை
புலனத்தில் பகிர்கின்றேன்.

தனிமையில் வந்தவர்கள்
தனிமையில் இருப்பதில்லை.

துணையாக இருப்பவர்கள்
துன்பத்தில் கலப்பதில்லை.

உணர்வுகளால் உள்ளங்கள்
உடைந்துதான் போவதுண்டு.

கண்ணீரால் கவலைகள்.

கண்விட்டுப் போவதுண்டு.

எவருமில்லா உலகத்தை
எங்கெங்கோ தேடுகிறேன்.

தேவனவன் தந்துவிட்டால்
தேடலினை முடித்திடுவேன்.

வாடையிலே வாடிவாடி
வாழ்க்கையை வெறுத்துவிட்டேன்.

போனவரைத் தேடியினி
போவதில்லை முடிவெடுத்தேன்.

தனிமையிலே இனிமைகாண
தரணியெங்கும் அலைந்துவிட்டேன்.

போதிமர நிழலினிலே
புத்தனாக அமர்ந்துவிட்டேன்.

உறவுகளை துறந்தினிமேல்
நூல்களையே நாடிவிட்டேன்.

புதிதான உலகத்தை
தேடியின்று சேர்ந்துவிட்டேன்.

—

கோ. தனுசன்,
மட்டக்களப்பு,
இலங்கை.

---

# குறுங்கவிதை

வார்த்தைகள் கூட
வைத்தியம் பார்க்கும்
நம்பிக்கையூட்டும் பேச்சு

சிறிது நேரம் நிழலில் தங்கி
இளைப்பாறிச் செல்கிறது
வெய்யில்

பெற்றோரை விலக்கி
இடையில் புகுந்தது
காதல்

குயில் பாட
குழல் இசைத்தது
மூங்கில் காடு

விளக்கொளிகள்
இழுத்துச் செல்கின்றன
இரவு நேரப்பயணம்

—

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.
அலைபேசி: 6380704001



# அமுத(ன்) நட்பு

வெகு நாள்களுக்கு பிறகு மீண்டும் புத்துயிர்ப் பெற்றது இந்த இருவரின் நட்பு!

"டேய்... கோபி, எங்க உன் இணைபிரியாத நண்பன் அமுதனக் காணோம்...?"

"அவன், இன்னைக்கு அவனோட சொந்தக்காரங்க கல்யாணத்துக்கு போயிருக்கான். டா... நாளைக்கு வந்துடுவான்...! முருகேசா..."

"ரொம்ப நாளா உங்கிட்ட ஒன்னு கேட்கணும்னு நினைச்சேன்! இப்ப தான் அதுக்கு நேரம் வந்திருக்கு...!"

"என்னடா....முருகேசா...? என்ன விசயம்...? கேளு...!"

"கோபி, அதுவொன்னுமில்லடா... நீண்ட நாளாயிருந்த உங்க நட்பு திடீர்னு இடையில காணாம போயிடுச்சே...! ஏன்..? அதைத்தான் கேட்டேன்...!"

"அதுவா...! நான் உனக்கு நேரம் வரும்போது சொல்றேன். இப்ப கொஞ்சம் அவசரமா வீட்டுக்கு போறேன்." என்று அந்த தேநீர் கடையை விட்டு நகர்ந்தான் கோபி.

இந்த இருவரின் நட்பில் ஏற்பட்ட பிரிவைத் தெரிந்துக் கொள்ள மிகுந்த ஆவலாக இருந்த முருகேசனுக்கு; கோபியை தனிமையில் சந்தித்து பேசிட மீண்டும் அந்த தேநீர் கடையில் ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

"டேய்... கோபி... எப்படி இருக்க...? நான் அன்னைக்கே உங்கிட்ட கேட்டேன்ல... உங்க நட்பு திரும்பி எப்படி சேர்ந்துச்சு...!?"

"ஓகோ...! அதுவா...? ஒருநாளு; நானும் அமுதனும் கடைவீதியில சுத்திக்கிட்டு இருந்தோமா....! அப்ப எங்க அம்மாக்கிட்ட இருந்து ஒரு அழைப்பு... 'டேய்... கோபி, நம்ம பால்காரர் இன்னைக்கு வர்றல... நீ வர்றப்ப மறக்காம பால் வாங்கிட்டு வந்திடுனு' சொல்லிட்டாங்க. அப்ப எங்கிட்ட இருந்த காசுல ஐந்து ரூபாய் குறைவா இருந்துச்சு...! நான் மறுநாள் தர்றேன்னு சொல்லி அமுதனிடத்தில ஐந்து ரூபாய கடனா கேட்க... அவனும் உடனே கொடுத்திட்டான். "

"இது என்னடா.... பெரிய விசயம்...? அதுக்கும் உங்க பிரிவுக்கும் என்ன சம்பந்தம்...? ஒன்னுமே புரியலையே...?"

"அது தான் பெரிய விசயமே...! நான் கடன் வாங்கியத மறந்துட்டேன். அடுத்த இரண்டு நாளிலிருந்து அவன் எங்கிட்ட பேசவே இல்ல...! எனக்கு ஒரே குழப்பம். தீடீரென அவன் பேசாம போயிட்டானே...? ஒருவேளை நம்மள ஒதுக்கிறான் போலயேனு நினைச்சுகிட்டு அன்றேயிலிருந்து நானும் பேசாமலே

இருந்திட்டேன்."

"அடடா...! அதுசரி... அப்பறம்!"

"ரெண்டு மாசமா பேசாம, இந்த ரெண்டு நாளைக்கு முன்னாடி தான் இந்த தேநீர் கடைக்காரரர் மூலமா அவனைப் பற்றி தெளிவா புரிஞ்சிகிட்டேன். அவனிடத்தில மன்னிப்பும் கேட்டுட்டேன்."

"என்னடா... இது புதுசா இருக்கே...!"

இவர்கள் பேசியதை கவனித்துக் கொண்டிருந்த அந்த தேநீர் கடைக்காரர்...

"தம்பி, முருகேசா... ஒரு நாளு; எங்கடையில அமுதன் வந்து தேநீர் குடிச்சிட்டு; அவங்கிட்ட இருந்த காசு கொடுத்தது போக; எனக்கு ஒரு ரூபாய் பாக்கி மட்டும் அவன் தரவேண்டி இருந்தது. நான் அவங்கிட்ட 'தம்பி அந்த சில்லரை வேணாம்பான்னு...' சொல்லிட்டேன். அதுக்கு அவன்...

"அண்ணா, எங்கிட்டு இப்ப காசு இல்ல...! நான் இங்கே திரும்பி வர்றப்ப பாக்கியத் தந்திடுவேண்ணு' சொல்லிட்டு போயிட்டான். அரை மணி நேரத்துல ஒரு பெரிய ஆச்சரியம் பா...!"

"என்னாச்சு அண்ணா...?"

"அப்ப...இங்க வந்த அமுதன் 'அண்ணா, இந்தாங்க உங்க பாக்கி ஒரு ரூபாய்ன்னு எங்கிட்ட கொடுத்துட்டு, இது உங்களுடைய உழைப்பு அண்ணா...! அதுவும் நான் கடனாகத் தான் வாங்கினேன். நான் சொன்ன மாதிரி என் வாக்குறுதிய நிறைவேற்றிட்டேன் அண்ணா...!' என்றுச் சொல்லி அங்கிருந்து நகர்ந்துட்டான். அவனுடைய ஒழுக்கம் என் உடம்பையும், என் உணர்வையும் கொஞ்ச நேரம் சிலிர்க்க வச்சிருச்சு. தம்பி!"

"முருகேசா... நான் அன்றைக்கு அமுதனிடத்தில பாலுக்காக கடன் வாங்கிய அந்த ஐந்து ரூபாயும் என் நினைவுக்கு வந்துச்சு. அதை நான் அவங்கிட்ட திருப்பித் தர்றப்ப தான்; அவனைப் பற்றிய அழகான குணம் எனக்கு தெரிஞ்சது டா...! வாக்குறுதி, நம்பிக்கை,தக்க சமயத்தில் செய்த உதவி, ஒழுக்கம் இதையெல்லாம் அவனும் கடைபிடிச்சு தன் நட்பிற்கும் கற்றுத் தரணும்னு தான் என்னையும் பிரிஞ்சு; எனக்கு உணரச் செஞ்சிருக்கான். அது தான் ஆச்சரியமே...! இப்படிப்பட்ட என் நண்பன் அமுதன் எனக்கு நட்பாய் கிடைக்க நான் என்னத் தவம் செஞ்சேனோ...?"

"உண்மையிலேயே உங்க நட்பு நினைச்சு பெருமைப்படுறேன் டா... கோபி..!"

கோபியும், முருகேசனும் நல்லோர்களின் வழியில் நடக்கும் அமுதனை, தங்களின் சிறந்த வழிகாட்டியாக தமது வாழ்வில் தேர்ந்தெடுத்துக் கொண்டனர்.

கொடுக்கல், வாங்கலே மனிதனின்
நற்குணத்தை தீர்மானிக்கிறது.

(முற்றும்)

—

வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
துபாய்.



# மாற்றம் கொள்

உன்னை
எனக்கு ரொம்பவே பிடிக்கும்
யார் சொன்னது உன்னை
எனக்கு பிடிக்காதென்று!
நீ தான் அப்படி தவறாக
எண்ணிக்கொண்டிருக்கிறாய்!

நீ கோபமாய்
பேசும் போது மட்டும்
உன் சொற்கள் பிடிக்காது!

நீ  குறைவாய்
உடுத்தியிருக்கும் போது மட்டும்
உன் ஆடைகள் பிடிக்காது!

நீ  அழகாய்
காட்டிக்கொள்ளும் போது மட்டும்
உன் முகப்பூச்சு பிடிக்காது!

நீ உண்மையை
மறைக்கும் போது மட்டும்
உன் பொய்கள் பிடிக்காது!

நீ திமிராய்
இருக்கும் போது மட்டும்
உன் கர்வம் பிடிக்காது!

உன்னை எனக்கு இன்னும் ரொம்பவே
பிடிக்கும்
இவைகளையெல்லாம்
நீ முற்றிலும் களைந்து விட்டால் அல்லது
மாற்றிக்கொண்டால்!

உன்னை பிடிக்காது
என்று சொல்லவில்லை
செயல்கள் தான் பிடிக்காததாய்
இருக்கிறது என்கிறேன்
புரிந்து கொள்ளடி என் செல்லமே
எண்ணமும் செயலும்
சேர்ந்தது தானே குணம்!

"தேனிலவு"

திருமணம் முடிந்து
இரு மணம் ஒன்ற
செல்கிறார்கள்
மணமக்கள்
தேனிலவிற்கு!

தேனிலவு
செல்பவர்களில்
காமத்தை மட்டும்
கழித்து விட்டு
வருகிறார்கள் சிலர்!

ஒருவருக்கொருவர்
புரிந்து அன்பை
பெருக்கிக்கொண்டு

வருகிறார்கள் சிலர்!

கூடவே வாழ்க்கைகான
பாடங்களை
வகுத்துக் கொண்டு
வருகிறார்கள் சிலர்!

கற்பமுற்று மூன்றாம்
நபரையும் சேர்த்து
கூட்டிக்கொண்டு
வருகிறார்கள் சிலர்!

அர்த்தமற்ற சந்தேகத்தால்
வாழ்க்கை கணக்கை
முடித்து கொண்டும்
வருகிறார்கள் சிலர்!

—

மகிழை. சிவகார்த்தி



---

# மௌனி என் காதலன்

"என்னடி அது சத்தம்...?!" - நெற்றி சுருங்கிய தில்ரூபா தலையை தூக்கி பார்த்தாள். அருகே ஆரஞ்சி அசையாமல் படுத்திருந்தாள்.

புது இடம். புது அறை. புத்திக்குள் தக் தக் தக் என புது சத்தம். மீண்டும் கண்களை கூராக்கி இருட்டை மேய்ந்தாள். ஜன்னல் வழியே கசிந்து கொண்டிருக்கும் இரவின் துண்டுகள் இலகுவாகி நுழைந்து கொண்டிருக்கிறது.

சத்தம் தான். கற்பனை இல்லை.

"ஏய்... ஆரஞ்சி... என்ன சத்தம் அது...?"- தானாகவே குரல் கம்ம... ஏனோ வியர்க்க தொடங்கி விட்டது.

எழுந்தமர்ந்து அருகில் தூங்கி கொண்டிருந்த ஆரஞ்சியை தீர்க்கமாக பார்த்தாள். அனிச்சையாய் மனம் அறையை சுழன்றது. பாதி மஞ்சளும் மீதி பழுப்புமாக ராத்திரி லைட் றெக்கை விரித்து கவிந்து கொண்டிருந்தது.

"தூக்கத்த பாரு..." முனங்கியபடியே செய்வதறியாத தடுமாற்றத்தை ஜன்னல் திறக்கவும் பயமாக்கி கொண்டிருந்தாள்.

சத்தம் ஆணி அடிப்பது போல... கை தட்டுவது போல... ஹீல்ஸ் மாட்டிய பூனை நடை நடப்பது போல... என்ன இது.. தொந்தரவாக இருக்கிறதே... குறட்டைக்கு காது மூடுகிறவள் போல டக் தக் டக் தக் -க்கு உடலையே மூட வேண்டியதானது. போர்வையை இழுத்து மூடிக் கொண்ட பிறகும்... போர்வையின்

ஓரத்தில் மெல்லிசாக நடைபோடும் கட்டெறும்பின் கால் தடம் போல அந்த தக் தக்... டக் டக் தொடர்ந்தது.

சரியான கும்பகர்ணிடி நீ.. நைட் எத்தனை முறை.....

சட்டென அவள் பேச்சை பைபாஸ் செய்து 500 பக்கங்கள் கொண்ட தடிமனான புத்தகத்தை நீட்டினாள் ஆரஞ்சி.

முதலில் தடுமாறி யோசித்து... பிறகு உடனே புரிந்து கொண்டு ஹேய்... இது மெரூனியோட நாவலா. தலைப்பை பார்த்தாள். மாயக்குதிரை. முகம் மலர ஆரஞ்சினா ஆரஞ்சி தான். கன்னம் கிள்ளி காற்றுக்கு முத்தமாக்கினாள்.

"மெரூனியோட எழுத்த அங்கங்க நெட்ல படிச்சதோட சரி. ஒரு புக் கூட கிடைக்கலனு சொன்னல. இங்க பாரு..." அப்படியே ஆரஞ்சி கை காட்டிய திசையில்... இருந்த நூல் அலமாரி ஆடை விலக்கி பேரழகை காட்டிக் கொண்டிருந்தது.

வாவ் வாவ் என றெக்கை விரிந்தவள்... "அத்தனையும் மெரூனியோட கலெக்சனா...!" என்றபடியே வேகமாய் அலமாரி பக்கம் தாவினாள்.

"அயோ என்னடி இன்னைக்கு இந்த அசத்து அசத்தற."- கைகள் வெற்றிக்குறிக்கு குவிந்து குதித்தன.

சொல்லிக்கொண்டே மெரூனி நூல்களை வெறி கொண்டு தடவினாள். அலமாரியில் மெரூனியின் எழுத்து வாசனையை அவள் உயிர் ஆழம் இழுத்து பூசிக் கொள்ள முயற்சித்தது. அதை எடுக்கவா இதை எடுக்கவா என மனதுக்குள் பக்கங்கள் பக்கம் பக்கமாய் விரிந்தன. சட்டென அந்த அறைக்குள் ஒரு நீலவான சுழற்சி.

இலக்கியம் பழகிய இந்த கொஞ்ச காலத்தில் மெரூனி பற்றி கிடைத்தது சின்ன அறிமுகம் தான். கொஞ்சம் கொஞ்சம் ஆங்காங்கே படித்தது தான். யாரிடம் கேட்டாலும் பெரிதாக பதில் இல்லை. நெட்டில் தேடினாலும் தகவல் இல்லை. மர்ம எழுத்துக்கு சொந்தக்காரரும் மர்மமாகவே இருக்கிறாரே. அடிக்கடி தோன்றும் எண்ணங்களுக்கு இப்போது பளிச் நிலா டார்ச் அடித்தது.

"நீதான கேட்டுட்டே இருந்த... எழுத்தாளர் மெரூனி யாரு....யாருனு " ஆரஞ்சி ஆகாயம் காட்டுபவள் போல கண் இசைந்தாள்.

"மாய உலகின் பிதாமகன் மெரூனி புக் என் கைல..... வாவ்... " முனகியபடியே..." உனக்கு எப்பிடி அவர..."

அவளையே பார்த்த ஆரஞ்சி... மனம் படபடக்க குறுக்கிட்டு சிரித்தாள்.

"தெரியும். உனக்கு சர்ப்ரைஸ் குடுக்க

தான். சொல்லல."

அவள் பதில் பேசாமல்... நூல்களை கண்களால் தழுவிக் கொண்டிருந்தாள். கைகளால் சிலும்பிக் கொண்டிருந்தாள்.

"சரி நைட் தக் தக் தக் னு சத்தம் கேட்டருக்குமே...." - ஆரஞ்சி மெரூனி உலகத்தில் இருந்து தில்ரூபாவை வெளியே கொண்டு வந்தாள்.

"ஆமா... எத்தன வாட்டி உன்ன எழுப்பினேன்... அது என்னடி சத்தம்..." அவள் நினைவு இப்போது நேற்றிரவை சிமிட்டியது.

ஆரஞ்சி அர்த்தத்தோடு புன்னகைத்தாள்.

"அவர் தான். எழுதிட்டு இருந்தார்..."- சொல்லி விட்டு சொன்ன சொல்லில் இருக்கும் சுவையை உணர்ந்தவளாக சிலை ஆகி பார்த்தாள்.

"என்ன சொல்றா...!" என.. அவளும் அவளையே கூர்ந்து பார்த்தாள்.

"தினமும் இரவில் கணிப்பொறியில் ஒரு இசை கச்சேரி நடத்துவார். சதுர தொடர்வண்டியில் ஓட்டுவார். அவர் விரல்கள் எழுத ஆரம்பித்து விட்டால் ஒருபோதும் நிற்காது. அது ஒரு பெண் வீணையை மீட்டுவது போல. மலர்களின் ரீங்காரம் கேட்டிருக்கியா. மவுத் ஆர்கன் வாசிக்கும் மகரந்த சேர்க்கையை பார்த்திருக்கியா..."

"என்னடி என்னென்னவோ பேசற. திடீர்னு கவிதையெல்லாம் வருது.. " - குழப்பத்தோடு கேட்டாள். ஆனாலும் அவள் நெஞ்சில் மெரூனியின் மாயக்குதிரை தாவி குதிக்க ரெடியாக இருந்தது.

"ஒரு குழப்பமும் இல்ல. அவர் எங்க வீட்டுல தான் குடியிருக்காரு. கீழ் போர்சன்ல யாரு இருக்கானு கேட்டல்ல. அவர் தான்..." - பெருமை பொங்கும் உடல்மொழியில் மறுமை வாங்கிய கண்களில் சிரித்தாள் ஆரஞ்சி.

ஆச்சரியம் தாங்காமல் நெற்றி விரித்தாள் தில்ரூபா. "ஐயோ என்னடி இன்னைக்கு ஆச்சர்யமாக போட்டு தாக்குற....!" சிணுங்கி கொண்டே அவளைக் கட்டிக் கொண்டாள்.

அவளையே ஆழமாக பார்த்தவள் "வா அறிமுகப் படுத்தி வைக்கறேன்." அவள் கண்களைப் பற்றி வேகமாய் இழுத்தாள்.

துள்ளல் துகில் உரிந்து விடுதலை ஆக... ஆதர்ஷ எழுத்தாளரை பார்க்க போகும் பேராவல் தில்ரூபாவிடம்.

முன்னே ஆரஞ்சி செல்ல பின்னே மனம் அதிர தில்ரூபா இதயத்தில் தில்லானாவோடு சென்றாள்.

நான்கு கால்களும் பூனை நடையில் அவரின் வீட்டுக்குள் சென்றன. குளிர்ந்த ஓடையில் குட்டி கதிரவனாக எழுத்தாளரின் அறை. காகிதங்களின் வழியே காலத்தை நிகழ்த்தும் கனவு••• வீடாகி இருக்கிறது. திறக்காத சன்னல்

வழியாகவும் தென்றல் வந்து தீண்டுவது எழுதுகிறவன் அறைக்கே உரியது. கால் வைக்கும் இடமெல்லாம் கவிதைகள். கண் படும் நடையெல்லாம் கதைகள். பல பாத்திரங்கள் பாதி பாதியாக ஆங்காங்கே கிடந்தன. சில பாத்திரங்கள் மேசையில் எட்டி குதிக்க தயாராக இருந்தன. எழுதுபவன் உலகம் எத்தனை ரசனையானது. எத்தனை ரகசியமானது. மானுடம் வகுத்த எந்த திட்டமும் அவனுக்கு ஆகாது. அனல் மத்தியில் ரோஜாவனம் வளர்க்கிறவன். கண்களில் தீராத நெருப்பு இருக்கும் தானே. அந்த ஜுவாலை அவனறையில் அடிக்கும் தானே.

"எங்கடி காணோம்...!?" கண்களை சிமிட்டாத தில்ரூபா மெரூனியை சுமந்து கொண்டு நின்றாள். அவள் கண்களில் ஆவலின் பொங்குதல்.

"சத்தம் போடாத. அவர் தூங்கிட்டு இருக்கார்னு நினைக்கறேன்..." அவள் சொல்ல சொல்லவே கிச்சனில் என்னவோ சத்தம்.

அர்த்தத்தோடு பார்த்தவளுக்கு "அவரோட முதல் மனைவி..." என்று பதில் சொன்னாள்.

"என்னது... முதல் மனைவியா.." யோசித்தவளுக்கு கண்ணோரம் ஒரு கலவரம்.

"எழுத்தாளர்கள்னா அப்டிதான். ரெம்ப உள்ள போயி தேடக் கூடாது... சரி சரி... நாம இங்க இருக்கறது தெரிஞ்சுது... அவ்ளோ தான்.. கதகளி ஆடிடுவா.. வா போயிரலாம். அந்தம்மா வாக்கிங் போனப்பறம் வரலாம். அதுக்குள்ள தலைவரும் தூங்கி எழட்டும்..." கிசுகிசுத்தபடியே நேற்றிரவு எழுதிய கதை கட்டை எடுத்துக் கொண்டு வந்த வழியே தன் போர்ஷன்க்கு நடந்தாள் ஆரஞ்சி. திரும்பி திரும்பி பார்த்தபடியே பின் தொடர்ந்தாள் தில்ரூபா.

"உன்ன ஒன்னும் சொல்லாத அந்தம்மா...."

"என்ன என்ன சொல்லும்.. அந்தம்மா படிச்சத விட அவர் படைப்புகளை நான் தான் அதிகம் படிச்சிருக்கேன். அவரோட அத்தனை கலெக்சனும் என்கிட்டே தான் இருக்கு. இந்தா... இப்பிடி தினமும் அவர் எழுதறத பிழை திருத்தி நூலா மாத்தற வேலைய நான் தான் செய்யறேன். நியாயப்படி பாத்தா அந்தம்மா என்னை கூட வெச்சுக்கணும்..." களுக் சிரிப்பு சிரித்தாள்.

அடுத்தடுத்து புதுசு புதுசா ஏதோ சொல்லிட்டே இருக்காளே. தில்ரூபா மனதுக்குள் என்னவோ திக் திக் இப்போது. ஆனாலும் அவள் அனிச்சை மாயக்குதிரை நூலை திருப்பிக் கொண்டிருந்தது.

"நாம முகநூல்ல பழகி மூனு மாசம் இருக்குமா. இந்த மூனு மாசமும் நீ அவர் பத்தி என்கிட்டே பேசினது தான் அதிகம். நீ அவர் மேல அவ்ளோ கிறுக்கா இருக்கறது எனக்கு ஒரு மாதிரி இருந்துச்சு. அதான்... உன்ன இங்க

கூட்டிட்டு வந்தேன்..."

தில்ரூபா காதுகளில் ஆரஞ்சியின் குரல் என்னவோ மாதிரி கேட்டது. அதே நேரம் கைகள் நடுங்கின. அவள் கண்களில் சூடு பரவியது. இன்னும் கூர்ந்து பார்த்தாள். முதல் பதிப்பு என்ற இடத்தில் 1900 என்றிருக்க... வேக வேகமாய் பக்கத்தில் இருந்த இன்னொரு நூலை எடுத்து திருப்பினாள். அதிலும் 1902 என்றிருந்தது. அடுத்த நூலில் அவர் பற்றிய குறிப்பில் அவரின் இறப்பு 1966 என்றிருக்க... கால்களில் இதயம் துடிக்க... வேகமாய் திரும்பினாள்.

பின்னால் கதவோரம் நூறு வயது முது கிழவியாய் கூனிட்டு நின்ற ஆரஞ்சி... மையிட்ட கோவை கண்களை சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வாய் அசையாத குரலில் காலம் தாண்டிய காதலின் அலை... புகை புகையாய் சுருண்டு கொண்டிருந்தது. மறைந்திருந்த கோர பற்கள் வாய்க்குள்ளிருந்து மெல்ல நீண்டு கொண்டிருந்தன.

"முதல் மனைவி கதகளிதான் ஆடுவா. நான் பேயாட்டம் ஆடுவேன்... என்கிட்டயே மெரூனி என் காதலன்னு சொல்லுவியா.....ஏஏஏ......ஏஏறீரே••• ஈஏஏஏ...."

—

கவிஜி

---

# மதிப்பு

பெரும் குரலாய்
உதிர்க்கும் சொற்களுக்கான

மரியாதை அமைதியான
வார்த்தைகளுக்கு இல்லை

-------------------------

## அது வந்த பின்...

முன்பெல்லாம்
கருத்து மோதலில்
வார்த்தைக்கு வார்த்தை பதில்
பெரும் குரல் எழுப்பி...

இப்போது
அமைதியாய்
பதில்...

மோதல் நீண்டால்
வேறு பேச்சு
இல்லையெனில்
இடத்தை காலி செய்தல்...

வெற்றி எனில்
நண்பர்கள் , உறவுகள்
ஒருவர் விடாமல்

அறிவிப்பு...

இப்போது
உள்ளுக்குள்
உவகை...
அடுத்தது பற்றி
யோசனை...

கடுஞ்சொற்களால்
வசவு பரிசாகும்
போது
உபயோகமில்லையோ
என சுற்றியுள்ளோரிடம்
புலம்பல்..

தற்போது
அவர்களுக்கு
தெரிந்தது அவ்வளவு தான்
என கடந்து போதல்...

அதன் பெயர்
மனப்பக்குவம்...

-------------------------

## மீண்டும் மீண்டுமான

விருப்பம் போல்
காலை விழிப்பு

தோணுகின்ற பொழுதெல்லாம்
காபி/ தேநீர்

சொன்னால் கிடைக்கின்ற
பிரிய உணவு

நேரக்கணக்கு வைத்து கொள்ளா
படுத்தபடி மோட்டுவளையை
பார்த்தபடி யோசிப்பு

காலம் இருப்பதால்
அதிக நேரம்
அலைபேசி பார்க்கும்
உவகை

ஞாயிறன்று ஒளிப்பரப்பு
ஆகும் தொலைக்காட்சி
சிறப்பு நிகழ்ச்சி பார்வை

இத்தனையும் வார விடுமுறையில்
அனுபவித்து விட்டு

செய்பணி இடம்
நோக்கி நகருகையில்

இப்படியே தொடரக்கூடாதா
என மீண்டும் மீண்டுமான
மனதின் புலம்பலுக்கு

வாரத்தின் ஒரு நாள்
என்பதால் தான்
இத்தனை நிறைவு
என
புத்தியின் தெளிவான
பதிலாய்

-------------------------

## இவர்கள் படுத்தும் பாடு...

காத்திருப்பு

காலங்களில்

நாளையவற்றுக்கான
தயாரிப்பில்

பிறரின்
அபிப்பிராயம்
பற்றிய
யோசனையில்

செயல் பயணம்
தொடங்கும்
கணத்தில்

நன்றாக பேசியவர்
வாய் அடைத்து
போகையில்

கிடைக்காது
போய்விடுமோ

திட்டமிடல்
தவறு ஆகி விட்டால்

அபிப்ராயம்
தவறாய் சொல்லப்பட்டால்

செயல்பாடு
நன்றாக இல்லையென்றால்

பேசாமால்
இருக்க
தவறு
நம்முடையதோ

என

நிகழ்வுக்கு முன்னே

அப்பப்பா
எண்ணற்ற
குழப்பங்கள்

மனதும்
புத்தியும்
படுத்தும் பாட்டால

அதெல்லாம்
நடக்க போகிறதோ
இல்லையோ

அது வேறு கதை

-------------------------

## அத்தனையும் நடந்தாலும்...

சொல்லாமலே
செய்த பணிக்கும்

காலக்கெடுவுக்குள்
செய்த வேலைக்கும்

ஆலோசனையே
தேவைப்படா
எடுத்த சரியான
முடிவுக்கும்

நினைவூட்டலும்
பின்தொடர்ச்சியும்
தேவைப்படா
நிறைவேற்றிய
பொறுப்புக்களும்

தவறே நடந்தாலும்
பிறரால் கண்டுபிடிக்காத
முடியாத செயலை
சரியாய் செய்தமைக்கும்

கண்டு கொள்ளாப்படாமாலும்
அங்கீராக்கப்படாமாலும்

இருந்தாலும்

சிறிய தவறையும்
பூதாமாராக ஆக்கப்படுவதாலும்

தவறாய் புரிந்து
கொண்டு
இல்லை
புரிதலை இல்லாமால்
சொல்லப்படும்
வசைமொழியிலும்

மனம்
சங்கடப்படும் தான்
புத்தி ஒருகணம்
செயலற்று போகும் தான்

ஆனால்
அதற்காக
உளப்பூர்வமாய்
கடமை உணர்விலும்
பொறுப்பு உணர்ந்து
மனசாட்சியுடன்
கூடிய
பணிகளை
செய்யமால்
இருக்கலாமா

காரணமாய்
அது நம் இயல்பாயிற்றே

------------------------

## அதையும்...

தன்னுடைய
வெற்றியின்
சந்தோஷம்
தோல்வியின்
வேதனை
சாதிக்க போகிற
திட்டங்கள்
பொது விஷயங்கள்
பற்றிய கருத்து
பிறரை பற்றிய
விமர்சனங்கள்

எதிர் மனிதனிடம்
நீட்டிக்கொண்டே
போகும் முன்

அவரின்
உடல் மொழியையும்
உற்று நோக்குவோம்

பார்த்தால்
அவருக்கு கேட்க
விருப்பம் உள்ளதா
கேட்கும் நிலையில்
அவர் உள்ளரா
என தெரிந்து
இருவருடைய

நேரமும்
மிச்சப்படும்...

------------------------

## சிலரும்... பலரும்...

கலகலப்பாய்
திருமணத்தில்
உறவுகளோடு
இருந்து விட்டு
அவரவர் இல்லம்
திரும்பும் தருணத்தில்...

வார விடுமுறையை
இல்லத்தினரோடு
இருந்து விட்டு
செய் தொழிலுக்கான
இடம் நோக்கி நகருகையில்...

அதிக வருமானத்திற்காய்
வெளிநாட்டுக்கு பிழைப்புக்கு
செல்கையில்
உறவையும், நட்பையையும்
சொந்த மண்ணை பிரியும்
தருணத்தில்...

அபூர்வமாய்
பள்ளிகால,கல்லூரிகால
நண்பர்களின் சந்திப்பில்
மணிக்கணக்கில்
பழங்கதை பேசி
இல்லம் திரும்புகையில்...

அடுத்த வீடு
பக்கத்து வீடு
எதிர்த்த வீட்டினரை
உறவு முறை வைத்து
பழகிய பின்
பணி மாற்றத்தால்
பிரிய நேருகையில்...

சிலருக்கு துக்கத்தால்
தொண்டை அடைக்கும்
கண்ணீரிலிருந்து
நீர் பொழியும்...

பலர்
உணர்வுகளை
அடக்கினாலும்
வருத்த ,சோக முகம்
காட்டிக்கொடுக்கும்...

------------------------

## சேர்த்துக்கொண்டால்

சாதித்த
சந்தோஷ பொழுதுகளின்
கொண்டாட்ட
பொழுதுகளில்

காலக்கெடுவுடன்
இலக்கு

அதிலிருந்து
சிறிதும் விலகா
செயல் பயணம்

இடையூறுகளை
எதிர் கொண்ட விதம்

முடித்தே ஆக வேண்டும்
என்று கொண்ட உறுதி

இவை தான் காரணங்கள்
என்று சேர்த்து
எண்ணம் கொண்டால்

அடுத்தவற்றுக்கான
பலம் சேர்ப்பதோடு
நம்பிக்கையும்
கொடுக்கும்...

------------------------

## அதுவும் தான்...

புத்தி ரீதியாய்
பொருளாதார ரீதியாய்
உடல் ரீதியாய்
மன ரீதியாய்

உதவி தேவைப்பட்டவர்களுக்கும்
அதற்கு தகுதியானவர்களுக்கும்

நம்மால்
இயலவில்லை
எனினும்

நாம் அறிந்த
அதற்கு தகுதி உடையவர்களை

உதவச்சொல்லி
உதவுவதும்

சிறப்புத்தான்

------------------------

## அவைகளுக்கு மட்டுமில்லை...

பட்டம்
பதவி
செல்வம்
செல்வாக்கு

இவைகளுக்கு மட்டுமில்லை

உரிய நேரத்தில்
துல்லிய பணி முடித்தமைக்கு
'தோள் தட்டல்'

பின்னால் நடக்கப்போவதற்கு
முன்னால் அனுமானம்
செய்தவைக்கு
உதட்டு மொழியால்
'சிறப்பு'

அந்த கணத்து சூழ்நிலைகேற்ப
சொல்கின்ற
நகைச்சுவைக்கு
வாய் மொழியாய்
'அருமை'

சரியான நேரத்தில்
குழப்பச்சவால்களுக்கு
தீர்வு சொல்கையில்
அகமலர்ச்சியுடன்

'நன்றி'

புரியாத
தெரியாத
தேவைப்படும் விஷயங்களுக்கு
எளிமையான
தெளிவான
விளக்கம் கொடுக்கப்படுகையில்
'நன்று'

இதற்கும் சேர்த்துத்தான்
மனித மனங்களின்
ஏக்கங்களும்
எதிர்பார்ப்புகளும்

-------------------------

## அதுவும் தான்...

புத்தி ரீதியாய்
பொருளாதார ரீதியாய்
உடல் ரீதியாய்
மன ரீதியாய்

உதவி தேவைப்பட்டவர்களுக்கும்
அதற்கு தகுதியானவர்களுக்கும்

நம்மால்
இயலவில்லை
எனினும்

நாம் அறிந்த
அதற்கு தகுதி உடையவர்களை

உதவச்சொல்லி

உதவுவதும்

சிறப்புத்தான்

-------------------------

## ஆமாம்கள் தேடி...

நிறைய பேசிவிட்டு
'சொல்றது சரிதானே'

கணித்தது சரியாகையில்
'அன்னிக்கே சொன்னேன் இல்ல'

செயல் பற்றி விளக்கிவிட்டு
'என்னைப்பற்றி தெரியும் தானே'

மாறுபட்ட கருத்தை
வாய் மொழியாகையில்
'அது தவறு தானே'

சிறப்பானவை பற்றி
பேசுகையில்
'அருமை தானே'

என
எதிர்மனிதரிடம்
ஆமாம்கள் தேடி...

-------------------------

## வளைக்கதக்க வார்த்தைகள்...

இந்த பணியை
முடித்து விடுகிறாயா
"பார்ப்போம்"

இந்த முடிவு
சரி தானா
"அப்படித்தான் நினைக்கிறேன்"

இந்த உதவியை
செய்கிறாயா
"யோசிக்கிறேன்"

இதை இலக்காய்
கொள்கிறாயா
"அப்புறம்"

பின்னர்
எப்படி வேண்டுமானாலும்
மாற்றிக்கொள்ளும்
வளைக்கத்தக்க வார்த்தைகளாய்...

-------------------------

## வளைக்கதக்க வார்த்தைகள்...

இந்த பணியை
முடித்து விடுகிறாயா
"பார்ப்போம்"

இந்த முடிவு
சரி தானா
"அப்படித்தான் நினைக்கிறேன்"

இந்த உதவியை
செய்கிறாயா
"யோசிக்கிறேன்"

இதை இலக்காய்
கொள்கிறாயா
"அப்புறம்"

பின்னர்
எப்படி வேண்டுமானாலும்
மாற்றிக்கொள்ளும்
வளைக்கத்தக்க வார்த்தைகளாய்...

-------------------------

## அலைபேசி

அவசியத்துக்கு பிறந்தவர்
ஆபத்ததாய் ஆனவர்

அலைபேசி

உறக்க இரவுகளை
தொலைப்பது உன்னிடத்தில்

அலைபேசி

வாசிப்பையும் யோசிப்பையும்
மறக்க வைத்தவன்

அலைபேசி

பேசாதவரிடத்து பார்வையால்
சொந்தங்களிடத்து மௌனம்

-------------------------

## நீங்க சொல்லிட்டிங்க...

முயற்சிக்குப்பின்னான
தோல்விக்கும்

ஆழ்ந்த யோசனைக்குப்பின்னான
முடிவுக்கான தடுமாற்றத்திலும்

உச்சப்பட்ச
திறமை காட்டிய பின்னான
கிடைக்கா பெறா
அங்கீகாரத்துக்கும்

கடும் உழைப்புக்கும்
பின்னான
பொருளாதார சிக்கலுக்கும்

நிறைய செயல் புரிந்த
பின்னான
தன் திருப்தி இல்லாமையிலும்

எதிர் மனிதரிடம்
ஆறுதலும்
ஊக்கமும்
ஆலோசனையும்
தட்டிக்கொடுத்தலும்
வேண்டுகையில்

பதிலாய்
நீஙக சொல்லிட்டிங்க
வந்தால்

எப்படி இருக்கும்

------------------------

## அவர் வந்தால் கூடவே இவர்களும்...

ஒரு வெற்றியில்
அது சிறியதாய்
இருப்பினும்
கூடவே
தன்னம்பிக்கை
புதிய கடின இலக்குகள்
அர்த்தப்பட்டதான வாழ்க்கை
உள்ளம் நிறைய உவகை...

ஒரு சின்ன தோல்விக்கும்
கூடவே
மனம் நிறைய பதற்றம்
அடுத்தது பற்றிய பயம்
ஏன் எனக்கு மட்டும் புலம்பல்
தோல்விக்கான அடுக்கு அடுக்காய்
காரணங்கள்

------------------------

## அதுக்கும் மேலே...

மற்றவரால்
சொல்லிக் கொடுக்கப்பட்டவைகள்

பார்த்து
தெரிந்து கொண்டவைகள்

முந்தையவைகளால்
புரிந்து கொள்ளப்பட்டவைகள்

சுய அனுபவத்தால்

கற்றுக்கொள்ளப்பட்டவைகள்

உறுதியாய்
உபயோகமளிக்கும்
என்றாலும்

அதுக்கும்
மேலே

புதியவை தொடங்குகையில்
அந்த கணத்து
சூழ்நிலைகள்
அதில் உள்ள
சவால்கள்
முடிக்க வேண்டிய
கட்டாயம்
என
இதற்கும் சேர்த்து
பணியாற்ற வேண்டியுள்ளது

செய்தொழிலும்
வாழ்க்கை பயணத்திலும்...

-------------------------

## மெய்யும் பொய்யும்

பிரச்சனைகள்
என்ற நிஜத்தால்
தாக்கப்படும் போது

எனக்கு மட்டும்
ஏன் கஷ்டங்கள்
என்ற பொய்யான
வினா தொடுப்பது

-------------------------

## சற்றே வேறுபட்ட...

இளமையிலும்
மத்திம வயதிலும்
அதற்கு மேலும்
நிகழ்வுகளுக்கான
உணர்வுகள்
சற்றே வேறுபட்டதாய்...

வெற்றி என்றால்
முன்னதில் ஆர்ப்பாட்டம்
பின்னதில் மன நிறைவு

தோல்வி என்றால்
முன்னதில் விரக்தி
பின்னதில் காரணம்
பற்றிய நிதானமான யோசிப்பு

நண்பர்கள்
சேர்ந்தால் கேளிக்கைகள்
பின்னதில்
பழைய நினைவுகள்
பரிமாற்றம்..

-------------------------

## அன்றும்...

கருத்து மோதல்
கழுத்து நரம்புகள்
புடைக்க

சத்தம் செய்யும்
வாக்குவாதம் இல்லை

பிடிக்காதவை
பேசப்படும்
பொழுதினில்
உணர்வுகளை
அடக்கி
அமைதி

சோகத்திலும்
இழப்பிலும்
ஏமாற்றத்திலும்
காண்பவரிடத்தில்
பகிரும் புலம்பல்
இல்லை

வெற்றியிலும்
மகிழ்ச்சியிலும்
அறிந்தவர்க்கு
எல்லாம்
ஆர்பாட்டமாய்
வெளிப்படுத்து
இல்லை

என இப்போது
போலவே
அன்றும் இருந்திருக்கலாம்
என எண்ணம் ஒருபுறம்

மறு புறத்தில்
பதிலாய்
வாய்ப்பில்லை

இன்றைய
நிலைக்கு
காரணங்களாய்

இடைப்பட்ட
காலங்களில்
தன் வாழ்விலிருந்து
கிடைத்த
அனுபவம்

பிறரை
உன்னித்து
கற்று கொண்ட
பாடங்கள்

வாசிப்பிலும்
யோசிப்பிலும்
செவி கொடுத்ததிலும்
கிடைத்த
மனப்பக்குவம்.

—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.